# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 210/மா/2025

**நாள்: 29.01.2026**

S. மீனாட்சிசுந்தரம்
சென்னை–600 044 --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–600 044, குரோம்பேட்டை, மாணிக்கம் நகர், கதவு எண்.4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.மீனாட்சிசுந்தரம் என்பவரின் 13.05.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.05.2025 அன்று பெறப்பட்டு 210/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, மாணிக்கம் நகர், கதவு எண்.4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.மீனாட்சிசுந்தரம் என்பவர் தனது 13.05.2025 நாளிட்ட மனுவில் இணைத்தனுப்பியுள்ள இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்ட 21.03.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட, அஸ்தினாபுரம், உதவி மின் பொறியாளர் பகுதிக்கு உட்பட்ட மாணிக்கம் நகரில் – 2 மின் கம்பங்கள் சாலையில் இடையூறாக இருப்பது குறித்து – பொறியாளர் கள ஆய்வு மேற்கொண்டு, மதிப்பீட்டு தொகை கட்டிய பிறகு தான் பணி மேற்கொள்ளப்படும் என்று கூறியதை, 19.01.24, 25.07.24, தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரிடம் கொடுத்துள்ளேன். இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே இந்த புகார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளர் தனது 19.01.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 0234/2026/இ1/ம3–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட அஸ்தினாபுரம், மாணிக்கம் நகரில் பொது சாலையில் இரண்டு மின் கம்பங்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதை மாற்றி அமைக்க கோரி 13.05.2025 நாளிட்ட மனுவில், மனுதாரர் அஸ்தினாபுரம் மின்வாரிய பிரிவு அலுவலக உதவி பொறியாளருக்கு விலாசமிட்டு கோரியுள்ளார். அதன் பேரில் மேற்காணும் இடத்தினை மின்வாரியம் மூலம் கள ஆய்வு மேற்கொண்டு மதிப்பீடு தொகை செலுத்திய பின்னரே பணி மேற்கொள்ளப்படும் என மனுதாரரரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இப்பொருள் சார்ந்து மனுதாரரும், மின்வாரியமும் தாம்பரம் மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்ட முந்தைய பல்லவபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதி மாநகராட்சி மண்டலம் 3–க்குட்பட்ட பகுதியில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் கோரிக்கையில் தெரிவித்துள்ள அஸ்தினாபுரம் மாணிக்கம் நகர் பொது சாலையில் இரண்டு மின்கம்பங்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதை மாற்றி அமைப்பதற்கான மின்வாரிய மதிப்பீடு மற்றும் அதற்கான கேட்பு தொகைய்யை மாநகராட்சி மண்டலம் அலுவலகத்திற்கு தெரிவிக்கக் கோரி இவ்வலுவலக 19.01.2026 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 23.01.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர்கள் திரு. S. மீனாட்சிசுந்தரம் மற்றும் முனைவர் லயன் கோவிந்தராஜன் ஆகியோர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட, அஸ்தினாபுரம் மாணிக்கம் நகரில், 2 மின்கம்பங்கள் சாலையில் 1996 லிருந்து இடையூறாக இருப்பது குறித்து 2016 முதல் 2024 வரை அந்த மின் கம்பங்களை மாற்றி தரவேண்டி புகார் மனு அளித்தும், இது குறித்து தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பல்லாவரம் நகராட்சியிலிருந்தோ அல்லது தங்களது பொதுநலச் சங்கத்திலிருந்தோ, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் விதிமுறைகளின்படி மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் இடமாற்றம் செய்யப்படும் என்று தெரிவித்தும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

இன்றைய விசாரணையில் தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஆஜரான இளநிலை பொறியாளர் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் மதிப்பீடு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், மதிப்பீடு பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார். எனவே, தாம்பரம் மாநகராட்சி தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் விரைவில் மதிப்பீடு பெற்று மதிப்பீட்டு தொகை கட்டியவுடன் குறிப்பிட்ட தேதிக்குள் கம்பங்களை அகற்றிட உத்தரவாதம் அளிக்குமாறு தாம்பரம்

மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். ''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி இளநிலை பொறியாளர் 23.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மனுதாரர் கோரிக்கையில் தெரிவித்துள்ள அஸ்தினாபுரம் மாணிக்கம் நகர் பொது சாலையில் இரண்டு மின் கம்பங்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதை மாற்றி அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் மதிப்பீடு மற்றும் அதற்கான கேட்பு தொகையை மாநகராட்சி மண்டலம் 3 அலுவலகத்திற்கு தெரிவிக்க கோரி 19.01.2026 நாளிட்ட இவ்வலுவலகம் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பம் இணைய தளத்தின் மூலம் 21.01.2026 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து மதிப்பீடு இரண்டு வாரங்களில் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை, இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தாம்பரம் நகராட்சிக்கு உட்பட்ட, அஸ்தினாபுரம் மாணிக்கம் நகரில் உள்ள சாலையில் 2 மின்கம்பங்கள் இடையூறாக இருப்பது குறித்து, அவற்றை மாற்றி தரவேண்டி புகார் மனு அளித்தும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பல்லாவரம் நகராட்சியிலிருந்தோ அல்லது தங்களது பொதுநலச் சங்கத்திலிருந்தோ, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் விதிமுறைகளின்படி மதிப்பீட்டுத் தொகை செலுத்தும் பட்சத்தில் இடமாற்றம் செய்யப்படும் என்று தெரிவித்தும் தாம்பரம் மாநகராட்சி ஆணையர் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், 23.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தாம்பரம் மாநகராட்சி சார்பாக ஆஜரான இளநிலைப் பொறியாளர் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் மதிப்பீடு கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், மதிப்பீடு பெற்று மதிப்பீட்டு தொகை கட்டியவுடன் குறிப்பிட்ட தேதிக்குள் கம்பங்களை அகற்றிட உத்தரவாதம் அளிக்குமாறு தாம்பரம் மாநகராட்சிக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் கோரிக்கையில் தெரிவித்துள்ள அஸ்தினாபுரம் மாணிக்கம் நகர் பொது சாலையில் இரண்டு மின் கம்பங்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதை மாற்றி அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் மதிப்பீடு மற்றும் அதற்கான கேட்பு தொகையை மாநகராட்சி மண்டலம் 3 அலுவலகத்திற்கு தெரிவிக்க கோரி கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது என்பதும், இதற்கான விண்ணப்பமும் இணைய தளத்தின் மூலம் 21.01.2026 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து மதிப்பீடு இரண்டு வாரங்களில் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், தாம்பரம் மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 எல்லைக்குட்பட்ட அஸ்தினாபுரம் மாணிக்கம் நகர் பொது சாலையில் இரண்டு மின் கம்பங்கள் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக அமைந்துள்ளதை மாற்றி அமைப்பது தொடர்பாக தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திடம் மதிப்பீடு மற்றும் அதற்கான கேட்பு தொகை குறித்து தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து இரண்டு வாரங்களில் பதில் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, அஸ்தினாபுரம் மாணிக்கம் நகர் பொது சாலையில் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள இரண்டு மின்கம்பங்களை மாற்றியமைக்க விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. S.மீனாட்சிசுந்தரம்,
கதவு எண் 4,
மாணிக்கம் நகர்,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

2/2/26
செயலாளர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032